பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 01 2025 6 30
செவ்வாய்க்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- நாடு முழுவதும் அஞ்சலகங்களில் நான்கு கோடிக்கும் அதிகமான செல்வமகள் சேமிப்பு திட்ட கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெறும் வகையில் நாடாளுமன்றமும், சட்டமன்றங்களும் திகழ வேண்டுமென்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா வலியுறுத்தியுள்ளார்.
- சமூகம் மற்றும் வரலாறு குறித்து இளைஞர்கள் அறிந்து கொள்வதற்கு நூலகங்கள் முக்கிய கருவியாக திகழ்கின்றன என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்
- மாநிலத்தின் வளர்ச்சி திட்டங்களுக்கான நிதி மேலாண்மையில் மாநில அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.
- 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா பத்து விக்கெட் வித்தியாசத்தில் மலேசியாவை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ----*</u>

[]<<<>>>[]

நாடு முழுவதும் உள்ள அஞ்சலகங்களில் நான்கு கோடிக்கும் அதிகமான செல்வமகள் சேமிப்பு திட்ட கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் தொடங்கப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் வகையில் மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 2015-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த சேமிப்பு திட்டத்தில் உள்ள வைப்பு தொகைகளுக்கு ஆண்டுதோறும் எட்டு புள்ளி இரண்டு சதவீதம் வட்டி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்போம் - பெண் குழந்தைகளை பாதுகாப்போம் திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டம் அஞ்சலகங்கள் மற்றும் குறிப்பிட்ட சில வர்த்தக வங்கிக் கிளைகளில் பெண் குழந்தைகளின் பெயரில் சேமிப்புக் கணக்கை தொடங்க பெற்றோர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.,

இந்த சேமிப்பு திட்டத்தின் குறைந்தபட்ச தொடக்க வைப்புத் தொகையாக 250 ரூபாயை செலுத்தலாம் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண் குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்திற்கு முதலீடு செய்யும் வகையில் நடுத்தர குடும்பத்தினருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இத்திட்டம் கடந்த பத்து ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[]<<<>>>[]

ஆக்கப்பூர்வமான விவாதங்களை நடத்துவதற்கான இடமாக நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள் திகழ வேண்டுமென்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

பாட்னாவில் நடைபெற்ற சபாநாயகர்கள் மாநாட்டில் நிறைவுரையாற்றிய அவர், முக்கியத்துவம் வாய்ந்த விவாதங்களில் பங்கேற்பதை நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மக்களுக்கு தரமான சேவைகளை வழங்குவதற்கு உறுப்பினர்கள் புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் அது தொடர்பான திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று திரு ஓம் பிர்லா கூறினார்.

[]<<<>>>[]

சமூகம் மற்றும் வரலாறு குறித்து இளைஞர்கள் அறிந்து கொள்வதற்கு நூலகங்கள் முக்கிய கருவியாக திகழ்கின்றன என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

கரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் ‘லட்சுமி வளர் தமிழ்’ நூலகத்தை அவர் இன்று திறந்துவைத்து பேசினார்.

உயர்கல்வியில் தமிழகம் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று திரு மு க ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - ஸ்டாலின்) --50-- செகண்ட்ஸ்)*

இந்த நூலகத்திற்கு தமிழக அரசின் சார்பில் ஆயிரம் நூல்கள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் கூறினார்.

அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையையும் திரு மு க ஸ்டாலின் திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் 90 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாநில ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் பங்கேற்று மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், மகளிர் மேம்பாடு, மாணவர் நலன், தொழில்முனைவோர் முன்னேற்றம் போன்ற திட்டங்களை மாநில அரசு திறம்பட செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு திரு மதிவேந்தன் அறிவுறுத்தினார்.

[]<<<>>>[]

மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதி மேலாண்மையில் மாநில அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடன் வாங்கும் மாநிலங்களில் தமிழகம் முன்னோடி மாநிலமாக உருவெடுத்துள்ளது என்று குற்றம்சாட்டியுள்ளார்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் மாநிலத்தின் கடன் அளவு, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவீதத்திற்குள் இருந்ததாக அவர் கூறியுள்ளார்.

வருவாய் பற்றாக்குறையை குறைப்பதற்கு கடன் அளவை கட்டுப்படுத்தி அவற்றை மூலதன செலவிற்காக பயன்படுத்த வேண்டுமென்று திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

[]<<<>>>[]

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் இன்று கொடி அணிவகுப்பு நடத்தினர்.

ஈரோடு நகர காவல்துறை துணை கண்காணிப்பாளர் திரு முத்துக்குமரன் தலைமையில் 140 பேர் பங்கேற்ற இந்த அணிவகுப்பு அந்த சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட கள்ளுக்கடை மேடு, மரப்பாலம், ஆலமரத்தெரு உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்றது.

இந்த இடைத்தேர்தலை பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்கு கொச்சின், திருவனந்தபுரம், நெய்வேலி போன்ற இடங்ளிலிருந்து தலா 80 பேர் வீதம் மொத்தம் 240 மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் ஈரோடு வந்துள்ளனர்.

இதனிடையே இந்த தொகுதியில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்து வருகிறது.

[]<<<>>>[]

ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில் மலைப்பாதைகளை சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றான சேர்வராயன் மலைத்தொடரில் அமைந்துள்ள ஏற்காடு ஆண்டு முழுவதும் இதமான தட்பவெப்ப நிலையுடன் காணப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) ---50 செகண்ட்*

[]<<<>>>[]

வேலூர் மாவட்டத்தில் சிறுத்தைகள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த தொடர்ந்து ஏ ஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்த மாநில அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதாகவும், காட்டுப்பகுதிகளுக்கு மக்கள் செல்ல வேண்டாம் என்றும் ஆட்சியர் திருமதி சுப்புலெட்சுமி கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட சொரையப்பட்டு ஊராட்சியில் 36 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு பிரசாந்த் நேரில் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களில் நாளை உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் நடைபெறும் என ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு மத்திய அரசு திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய 28 டன் யூரியா உரம் கோவில்பட்டியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

தேனி மாவட்டத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் 24-ஆம் தேதி நடைபெறும் என ஆட்சியர் திருமதி ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டம் உதகையில் வாகனங்களில் தீ விபத்து ஏற்பட்டவுடன் துரிதமாக செயல்படுவது குறித்து தீயணைப்புத் துறையினர் பொதுமக்களுக்கு இன்று செயல்முறை விளக்கம் அளித்தனர்.

[]<<<>>>[]

தென்காசி மாவட்டம் குண்டாறு நீர்த்தேக்கத்தில் தேசிய பேரிடர் மீட்புக்குழு மற்றும் தமிழ்நாடு தீயணைப்புத்துறையும் இணைந்து அணையில் படகு சவாரி செய்யும்போது தவறி விழுந்து தண்ணீரில் தத்தளிக்கும் நபர்களை மீட்பது குறித்த ஒத்திகை நிகழ்ச்சியை தத்ரூபமாக செய்து காண்பித்தனர்.

[]<<<>>>[]

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா பத்து விக்கெட் வித்தியாசத்தில் மலேசியாவை வென்றது.

கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற போட்டியில் முதலில் பேட் செய்த மலேசியா 31 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

32 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா இரண்டு புள்ளி ஐந்து ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி வெற்றி பெற்றது.

[]<<<>>>[]

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – தனிஷா கிரஸ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஜகார்த்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்த இணை – தாய்லாந்தின் Ornnicha – sukitta suwachai இணையை 21-6, 21-14 என்ற செட் கணக்கில் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - ஷிராக்ஷெட்டி இணை, தைவான் இணையை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – மோகன் பஹன் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

*End of News*